

# வாய்க்கால் வழியாக வரலாறு கண்ட காலிங்கராயன்!

கி.பி. 13-ம் நூற்றாண்டில் ஈரோடு வட்டம், வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த கனகபுரத்தில் நஞ்சையன் என்பவரின் மகனாகப் பிறந்தார் லிங்கையன். கொங்கு வேளாளர்களில் சாத்தந்தை குலத்தைச் சேர்ந்தவர்.

இளமையில் வீர விளையாட்டுகளில் ஆர்வம் காட்டிய லிங்கையன், பாண்டியர் படையில் சேர்ந்தான். வீரம்-நுண்ணறிவால் வீரபாண்டியனின் அமைச்சரும், தளபதியுமானார். வீரபாண்டியன், லிங்கையனுக்கு மிகவும் உயர்ந்த காலிங்கராயன் என்னும் விருது கொடுத்து, தன் சார்பில் கொங்கு நாட்டை நிர்வாகம் செய்ய அனுப்பினார்.

உத்தர மந்திரி என்ற சிறப்பை காலிங்கராயன் பெற்றார். அது, முதலமைச்சர் பதவிக்கு இணையானது. வெள்ளோட்டையே தலைநகராகக் கொண்டு நிர்வாகம் செய்யத் தொடங்கினார் காலிங்கராயன்.

வெள்ளோடு, கனகபுரம் போன்ற பல ஊர்களில் புதுக்குளங்கள் அமைத்தார். திங்களூர், நெரூர், குன்னத்தூர், பெரியபாளையம், கொடுமுடி, வெஞ்சமாக்கூடல், எலத்தூர் போன்ற இடங்களில் அணை நிறையும் காலமும், உடைவு குலைவுபட்டு நெடுநாள் பாழாகக் கிடந்த, பல குளங்களைப் புதுப்பித்தார்.

விசயமங்கலம் வாகைக்குளம் பழுதுபார்க்கப்பட்டு வீரபாண்டியப் பேரேரி எனப் பெயர் வைக்கப்பட்டது. புதுக்குளம் வெட்டிய ஊர்களில் முன்பு புன்செய் நிலம் உழுதவர்களே நன்செய்ப் பயிர் பயிரிட அனுமதிக்கப்பட்டனர். தனியார் சேர்ந்து புதுக்குளம் அமைத்தால் அல்லது பழைய குளம் பழுது பார்த்தால் சில ஆண்டுகள் வரி இல்லை என்றும், பின்னர் படிப்படியாகக் கால், அரைப் பங்கு வசூலிக்கப்பட்டது.

பல இடங்களில் காடுகளை அழித்து ஊர் ஏற்படுத்தி மக்கள் குடியமர்த்தப்பட்டனர். காலிங்கராயன் காடுபிடித்து அழித்து, நாடாக்கி மக்களைக் குடியேற்றின வெள்ளிர வெளி என குன்னத்தூர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாமை விளையும் இடம் எல்லாம் சம்பா விளைவிக்க வேண்டும் என்று எண்ணிய காலிங்கராயன், பவானி ஆறு காவிரியுடன் கலக்கும் இடத்துக்கு அருகே பவானியாற்றைத் தடுத்து அணைகட்டி நீர்மட்டத்தை உயர்த்தி கொடுமுடி நொய்யல் வரை வாய்க்கால் வெட்டத் தீர்மானித்தார்.

அதற்காக காலிங்கராயன் வினியோகம் என்ற வரிவசூல் செய்ய அரசர் அனுமதி அளித்தார். தனது குடும்பச் சொத்து முழுவதையும் வாய்க்கால் வெட்டும் பணிக்கு பயன்டுத்தினார். அணை-வாய்க்கால் பணிக்கு அறிவுரை கூறப் பத்து பேரை நியமித்தார். அவர்கள், தாவுதுறை பார்த்துச் சொன்னதாக ஆவணம் கூறுகிறது.

ஊராட்சிக்கோட்டை மலையும் அங்கிருந்து பவானி ஆறு வரை உள்ள தடமும் விலைக்கு வாங்கப்பட்டது. அணை கட்டத் தொடங்கும்போது வெள்ளை வேட்டுவர் என்பவர் அணை கட்டும் இடம் தன்னுடையது என்றார். அவரை வென்று அணைப் பணி தொடங்கப்பட்டது.

பத்துபேர் ஆலோசனைக் குழுவில் இருந்த பொங்கலூர் தெய்வசிகாமணி, நான்தான் அணை கட்டுவேன் என்று கூறவே, ஈரோடு கொங்கலாம்மன் கோயிலில் காலிங்கராயன், தெய்வசிகாமணி இருவரது பெயரையும் எழுதிப் போட, காலிங்கராயன் பெயரே வெற்றிப் பெற்றது.

அணை வாய்க்கால் பணி 12 ஆண்டுகள் நடைபெற்று 1282-ம் ஆண்டு தை மாதம் 5-ம் நாள் எல்லாப் பணிகளும் நிறைவு பெற்றன. பவானி ஆற்றில் அணை உள்ள இடம் கடல் மட்டத்திலிருந்து 534 அடி. வாய்க்கால் ஆவுடைப்பாறையில் நொய்யலில் கலக்கும் இடம் கடல் மட்டத்திலிருந்து 412.48 அடி. இடையே உள்ள தூரம் 32 மைல். மைலுக்கு 3.79 அடி நிலம் தாழ்வாக உள்ளது.

நேராக வாய்க்கால் வெட்டினால் தண்ணீர் வேகமாக ஓடி



- புலவர் செ.இராசு
கல்வெட்டு ஆய்வாளர்,
ஈரோடு

நொய்யல் ஆற்றில் கலந்துவிடும். அதனால், மேடு கண்ட இடம் எல்லாம் வாய்க்காலை வளைத்து வெட்டினார். அதனால் இந்த வாய்க்காலை மக்கள் கோணவாய்க்கால் என்றும் பாம்பு வழிகாட்ட வாய்க்கால் வெட்டப்பட்டது என்றும் கூறினர்.

32 மைல் உள்ள தூரத்தை வாய்க்கால் 56 அரை மைல் ஓடிக் கடக்கிறது. மேடு கண்ட இடங்களில் வலது பக்கம் கரை இல்லை. 12 ஆண்டுகள் சபதம் கோரி தீட்சை (தாடி) வளர்த்துப் பணியை முடித்தார். அன்று அயர்ந்து தூங்கிவிட்டார். குடும்ப நாவிதர், தூக்கம் கெடாமலேயே தாடியை நீக்கி சவரம் செய்துவிட்டு ஓரத்தில் பணிவாக நின்றார்.

தூங்கி எழுந்த காலிங்கராயன், மகிழ்ந்து உனக்கு என்ன வேண்டுமோ கேள் என்றார். சுவாமி, உங்கள் பெயர் உள்ளவரை என் பெயர் நிலைக்க வேண்டும் என்றார் நாவிதர். தான் அணை அருகே குடியிருந்த காலிங்கராயன்பாளையத்துக்கு நாசுவன்பாளையம் எனப் பெயரிட்டார். இன்றும் அப்பெயரிலேயே அந்தக் கிராமம் அழைக்கப்படுகிறது.

வாய்க்காலை தன் குடும்பத்தினரோ, தனது பிற்கால சந்ததியினரோ பயன்படுத்தக் கூடாது எனக்கூறி நாட்டுடமை ஆக்கினார். பாண்டியரின் ஆட்சி முடிவுக்கு வந்து துவாரசமுத்திரம் போசாளர், கொங்கு நாட்டில் ஆட்சியைத் தொடங்கினர். கொங்கு நாட்டுப் பரம்பரைப் பட்டக்காரர்களும், பாளையக்காரர்களும் தங்களுக்குச் சமமாக காலிங்கராயனுக்கு மரியாதை காட்டக் கூடாது என்றனர். அதனால் மனம் வருந்திய காலிங்கராயன், பொள்ளாச்சி அடுத்துள்ள ஊத்துக்குளிக்கு குடிபெயர்ந்தார். அவ்வூர் ஜமீன் ஊத்துக்குளி எனப் பெயர் பெற்றது.

நாடாண்ட அரசருக்குப் பேருதவி செய்து, மக்கள் நலம் பேணி எண்ணற்ற பொது நலப்பணிகள் ஆற்றிய காலிங்கராயன் சந்ததியினர், 37 தலைமுறைகளாக சீரும் சிறப்புடனும் பீடும் பெருமையுடனும் ஜமீன் ஊத்துக்குளியில் இன்றும் பெருமையோடு வாழ்கின்றனர்.

அந்த மரபில் வந்த ஏ. செந்தில்குமார் காலிங்கராயர், காலிங்கராயன் வரலாற்றையும், வெள்ளோடு வரலாற்றையும் வெளியிட்டுள்ளார். செயற்கரிய பல செயல்கள் செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த காலிங்கராயனை பல இடங்களில் மக்கள் தெய்வமாகப் போற்றி வணங்கி வந்ததை ஆவணங்களும் இலக்கியங்களும் கூறுகின்றன.

அணையில், காலிங்கராயனை சிலா பிரதிமை ரூபமாகச் செய்து உற்சவம் நடத்துவதால் மழை பொழிந்து நிரம்பிப் பயிர் வளர்வதாக ஆவணம் கூறுகிறது. பல கல்வெட்டுகளும், செப்பேடுகளும் தனிப்பாடல்களும் காலிங்கராயன் புகழ்பாடுகிறது.

காலிங்கராயன் கால்வாய் ஈரோட்டில் பெரும்பள்ளத்தின் மீது செல்வதும், கொம்பணையில் குரங்கன்பள்ளத்தின் கீழே வாய்க்கால் செல்வதும் மிக அரிய வேலைப்பாடாகும். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 16-ம் தேதி மாலை 6 மணி முதல் ஏப்ரல் 30-ம் தேதி மாலை 6 மணி வரை மூன்று போகத்துக்கு பத்தரை மாதம் தண்ணீர் வாய்க்காலில் திறக்கப்படும் என்று அரசு ஆணை கூறுகிறது.

வாய்க்கால் இரு கரைகளிலும் சுமார் 22 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. முன்பு 1,840 மதகுகள் இருந்தன. அவை 786 ஆக குறைக்கப்பட்டது. தண்ணீர் வீணாவதைத் தடுக்க 226 மதகாகக் குறைக்க வேண்டும் என்ற திட்டத்தை விவசாயிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. பத்தரை மாதம் தண்ணீர் விடப்படுவதற்குப் பதிலாக 9 மாதமாகக் குறைத்து, இருபோகம் விவசாயம் செய்யலாம் என்ற திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

காலிங்கராயன் கால்வாய் கழிவுநீரை நொய்யலில் தேக்கி அங்கொரு அணை கட்டி வாய்க்காலை கரூர் அமராவதி வரை நீட்டிக்கத் திட்டமிட்டு நொய்யலில் அணை கட்டி வாய்க்காலும் வெட்டத் தொடங்கினார் காலிங்கராயன். ஆனால், பணி முற்றுப்பெறவில்லை. நொய்யலில் காலிங்கராயன் கட்டிய அணை இன்று ஓட்டை அணை என்ற பெயரில் உடைந்து கிடக்கிறது.

இந்தியாவில் பவானி - நொய்யல் - அமராவதி ஆறுகளை இணைக்க முயன்று நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு முன்மாதிரியாக இருந்தவர் காலிங்கராயன். காலிங்கராயன் அணை வாய்க்காலை பல வெளிநாட்டுப் பயணிகள், பொறியியல் நிபுணர்கள் பாராட்டியுள்ளனர்.

முல்லைப் பெரியாறு அணை கட்டிய பென்னி குயிக் 1878-ம் ஆண்டு இக் கால்வாயைப் பார்வையிட்டு பாராட்டியுள்ளார். காலிங்கராயனின் சொந்த ஊரான வெள்ளோட்டில் 19.1.2007-ம் ஆண்டு மார்பளவு காலிங்கராயன் சிலை திறக்கப்பட்டது. மக்கள் நலன் பேணி நல்லாட்சி செய்த காலிங்கராயனுக்கு வெள்ளோட்டில் மணிமண்டபம் கட்ட வேண்டும், முழுஉருவச்சிலை வைக்க வேண்டும், நினைவு அஞ்சல் தலை வெளியிட வேண்டும். கால்வாய் வெட்டி முடித்த தை 5-ம் நாள் அரசு விழா எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம்.

